# செங்கல்பட்டு நகராட்சி

## <u>சாதாரண கூட்டம்</u>

**<u>2019ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.</u>**

---

**பொருள்.1**

செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களின் 5/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 813 நாள் 28.06.2019**

பதிவு செய்யபட்டது

**பொருள்.2**

செங்கல்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் 5/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**தீர்மான எண். 814 நாள் 28.06.2019**

பதிவு செய்யபட்டது

**பொருள்.3**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களின் 2019–2020 ஆம் ஆண்டுக்கான பொது ஏலம் 20.06.2019 ந் தேதி அன்று எட்டு இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நபர்கள் கலந்து கொண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளனர். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

குத்தகை இனம்.1

புதிய பேருந்து நிலைய உணவு விடுதி குத்தகை இனம் அரசு மதிப்பு ரூ.45,000/–

1. பொது ஏலத்தில் எவரும் பங்கு கொள்ளவில்லை
2. கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

   1. திரு.P.மோகன் 92/E இராமபாளையம் செங்கல்பட்டு ரூ. = 54,000/–
   2. திருமதி.G.மஞ்சு 24, முருகேசனார் தெரு செங்கல்பட்டு ரூ = 47,000/–

3. திரு.விக்னேஷ் சுந்தர்ராஜன் 16A, வரதனார் தெரு செங்கல்பட்டு ரூ = 67,500/–

மேற்படி குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.விக்னேஷ் சுந்தர்ராஜன் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.67,500/– அரசு மதிப்பிட்டை அதிகமாக உள்ளதால் இந்நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாது. எனவே மன்றம் ஏற்கலாம்.

குத்தகை இனம்.2

புதிய பேருந்து நிலையம் கடை எண்.10 அரசு மதிப்பு ரூ.25,500/–

1. கீழ்க்கண்ட மூன்று நபர்கள் பொது ஏலத்தில் கலந்துக் கொண்டார்கள்

    1. திரு.M. யோகேஷ்வரன் 1F, தேவராஜனார் தெரு ராதா மஹால் எதிரில் ரூ = 14,000/–
    2. திரு.ப.மகேஷ் 5, தேவராஜனார் தெரு செங்கல்பட்டு ரூ = 11,500/–
    3. திரு.J.கணேஷ்குமார் 22/119 காத்தான் தெரு செங்கல்பட்டு ரூ = 13,500/–

2. கீழ்க்கண்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.

    1. திரு.தீபன் 97, சாஸ்திரி நகர் செங்கல்பட்டு ரூ = 18,180/–

மேற்படி குத்தகை இனத்திற்கான அரசு மதிப்பு ரூ.25500/– ஆகும். ஆனால் ஒப்பந்தப்புள்ளியிலும், ஏலத்திலும் கோரிய தொகை மிகவும் குறைவாக உள்ளதால் மறு ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

குத்தகை இனம்.3

புதிய பேருந்து நிலையம் கடை எண்.17 சர்கார் மதிப்பு ரூ.18,330/–

1. பொது ஏலம்
   ஏலக் கேள்வி கோர எவரும் முன்வரவில்லை
2. கீழ்க்கண்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரம் பெற்றுள்ளது.
    1. A.தீபன் 97, சாஸ்திரி நகர் செங்கல்பட்டு ரூ = 3006/–

மேற்படி குத்தகை இனத்திற்கான சர்கார் மதிப்பு ரூ.18,330/– ஆகும். ஆனால் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர்கள் கோரிய தொகை மிகவும் குறைவாக உள்ளதால் மனு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

குத்தகை இனம்.4

ராஜேஸ்வரி வேதாசல காம்பளக்ஸ் கடை எண்.14 சர்கார் மதிப்பு ரூ.3050/–

1. பொது ஏலம் ஒருவர் மட்டும் கலந்துக் கொண்டார்.

திரு.G.முரளி 28, காத்தான் தெரு பெரிய நத்தம் ரூ.3,200/–

2. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.
   1. திரு.G.குமார் 121/59, திம்மராஜகுளம், G.S.T ரோடு செங்கல்பட்டு ரூ.4000/–

மேற்படி குத்தகை இனத்திற்கான அரசு மதிப்பு ரூ.3050/– ஆகும் ஆனால் ஒப்பந்தப்புள்ளி G.குமார் ஒப்பந்தகாரர்கள் கோரிய தொகை ரூ.4000/– அரசு மதிப்பிட்டைவிட அதிகமாக உள்ளதால் இந்நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாது மன்றம் ஏற்கலாம்.

குத்தகை இனம்.5

ராஜேஸ்வரி வேதாசல காம்பளாக்ஸ் கடை எண்.17 சர்கார் மதிப்பு ரூ.3050/–

1. பொது ஏலம் ஏலக்கேள்வி கேட்க யாரும் முன்வரவில்லை
2. கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
   1. திரு.வீரபாண்டியன் 83, அண்ணாசாலை செங்கல்பட்டு ரூ.2850/–
   2. திரு.திருவள்ளுவன் 113, N.G.G.O நகர் செங்கல்பட்டு ரூ.3150/–

மேற்படி குத்தகை இனத்திற்கான சர்கார் மதிப்பு ரூ.3050/– ஆகும். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.திருவள்ளுவன் ஒப்பந்தகாரர் கோரிய தொகை ரூ.3150/– சர்கார் மதிப்பிட்டைவிட அதிகமாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

குத்தகை இனம்.6

T.K.M ரோடு உணவு விடுதி குத்தகை இனம் சர்கார் மதிப்பு ரூ.7200/–

1. பொது ஏலம் ஏலக்கேல்வி கேட்க யாரும் முன்வரவில்லை

2. கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது

   1. திரு.எஸ்.திருவள்ளுவன் 113, N.G.G.O நகர் செங்கல்பட்டு ரூ.15,000/–
   2. திரு.முகமது ஷேக் அல்தாப் உசைன் 4/2, ஜாபர் தெரு, செங்கல்பட்டு ரூ.14,000/–
   3. திரு.முஸ்தபா 86/4, 2வது தெரு, காமராஜர் நகர், செங்கல்பட்டு ரூ.10,000/–

மேற்படி குத்தகை இனத்திற்கான சர்கார் மதிப்பு ரூ.7200/– ஆகும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.திருவள்ளுவன் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,000/– சர்கார் மதிப்போடு அதிகமாக உள்ளதால் மன்றம் அனுமதிகலாம்.

குத்தகை இனம்.7

தந்தை பெரியார் வணிக வளாகம் பின்புறம் அமைந்துள்ள காலிமனையில் இருசக்கர வாகனம் மற்றும் சைக்கிள் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் சர்கார் மதிப்பு ரூ.13,62,500/– சென்னை உயர் நீதி மன்ற தீர்ப்புபடி நிர்ணயிக்கப்பட்டது.

1. பொது ஏலம் ஏலக்கேள்வி கோர எவரும் முன்வரவில்லை.
2. கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
   1. திரு.K.கமலகண்ணன், 354, 4வது குறுக்குத்தெரு, வ.ஊ.சி நகர் செங்கல்பட்டு ரூ.13,63,500/–
   2. திரு.M/S.விமலா கன்ஸ்ரக்ஷன், 47, பிள்ளையார் கோவில் தெரு, சின்ன மேலையூர் செங்கல்பட்டு ரூ.13,63,000/–

மேற்படி குத்தகை இனத்திற்கான சர்கார் மதிப்பு ரூ.13,62,500/– ஆகும். மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.கமலகண்ணன் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.13,63,500/– சர்கார் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளதால், மன்றம் அனுமதிக்கலாம்.

குத்தகை இனம்.8

தினசரி மீன் நாளங்காடி 53 ஸ்டால்களில் கட்டணம் தண்டும் குத்தகை உரிமம் சர்கார் மதிப்பு ரூ.3,15,814/–

1. பொது ஏலம் மட்டும் வரப்பெற்றது. பொது ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்துக்கொண்டார்.
   1. திருமதி.N.சசிகலா, 39 B முருகேசனார் தெரு, செங்கல்பட்டு. கோரிய ஏலத் தொகை ரூ.3,20,000/–
   2. ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

மேற்படி குத்தகை இனத்திற்கான சர்கார் மதிப்பு ரூ.3,15,814/– ஆகும் ஏலதாரர் திருமதி.N.சசிகலா கோரிய தொகை ரூ.3,20,000/– சர்கார் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளதால் ஒரே ஒரு நபர் ஏலம் கேட்டு உள்ளதால் நிதி இழப்பு ஏதுமில்லை. ஏனவே மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அ.கு–

1. குத்தகை இனம் எண்.1,4,5,6,7–க்கு வரப்பெற்ற அதிகமான ஏலம், ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குத்தகை இனம் எண்.8 ஒரே ஒரு நபர் அதிக ஏலத் தொகை கோரியுள்ளார், சர்கார் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குத்தகை இனம் எண்.2,3–க்கு மறு ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசரம் அவசியம் கருதி 2019–2010 ம் ஆண்டு குத்தகை மற்றும் கடைகள் உரிமத்திற்கான உத்தரவு வழங்க வேண்டியும் அதன் மூலம் குத்தகை உரிமம் முன்வைப்புத் தொகை மற்றும் ஆண்டு குத்தகை தொகை குத்தகைதார்களிடம் பெற வேண்டியுள்ளதாலும் தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 815 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 4**

தமிழ்நாடு அரசு தேயிலை தோட்ட கழகத்தில் இருந்து வரப் பெற்ற 08.03.2019 ஆம் தேதியிட்ட கடிதம் எண் 1209/2019/எப்1 திரு.A.டில்லிபாபு என்பவருக்கு செங்கல்பட்டு அரசு போக்குவரத்து கழக பணிமனை முன்பு உள்ள பேருந்து நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு தேயிலை தோட்ட கழகத்தின் தேநீர் (ம) தேநீர் தூள் விற்பனையகம் அமைக்க உரிய உத்திரவு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு மேற்படி இடத்தில் பங்க் வைக்க இடம் ஒதுக்கிதர இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் மூலம் புலத் தணிக்கை செய்யப்பட்டதில், பணிமனை பாதுகாவலர் அறைக்கு தெற்கு பக்கம் EB டிரான்ஸ் பாரத்திற்கு பக்கத்தில் இடையே உள்ள இடம் பொது மக்களுக்கும், போக்கு வரத்திற்கும் இடையூறு இல்லாத இடமாக இருப்பதால் இந்த இடத்தில் தற்காலிக அனுமதி வழங்கலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்கண்ட இடத்தில் தற்காலிக பங்க் வைக்கவும், இதற்கு கீழ் கண்டுள்ள நிபந்தனைகளுக்குப்பட்டு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. இந்த உத்திரவு முற்றிலும் தற்காலிகமானது
2. இந்த தற்காலிக உத்திரவினை கொண்டு எதிர் காலத்தில் எவ்வித அனுமதியும் சட்டப்படி கோரகூடாது.
3. இந்த பங்க் “8X8” என்ற அளவில் மட்டுமே அமைக்க வேண்டும், பங்க் முன் புறம் (அ) பின் புறம், (அ) மேல் புறத்தில் எவ்வித கட்டுமானமும் ஏற்படுத்தக் கூடாது. தவறினால் தற்காலிக உரிமமும் ரத்து செய்யப்படும்.
4. இந்த பங்கிற்கு தற்காலிக மாதாந்திர கட்டணமாக ரூ.700/– செலுத்த வேண்டும்.
5. இந்த பங்கை பொது மக்களுக்கும், போக்கு வரத்திற்கும் எவ்வித இடையூறும் இன்றி அமைக்க வேண்டும்.
6. இந்த இடத்தினை நகராட்சி மூலம் அல்லது வேறு அரசுத் துறை மூலம் தேவைப்படும் போது எந்த நேரத்திலும் காலி செய்ய அதிகாரம் உண்டு.

7. இந்த இடத்தினை நகராட்சி கேட்டும் போது மறுக்கவோ, சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளவோ கூடாது.
8. இந்த தற்காலிக உத்திரவு ஒரு வருடத்திற்கு மட்டுமே.
9. இந்த உத்திரவு தொடர்ந்து தேவைப்பட்டால் வருடா வருடம் நகராட்சியின் அனுமதி பெற்று உரிமம் புதுபித்துக்கொள்ள வேண்டும்.
10. பங்கின் வரைபடம் (ம) ரூ.20/– க்கான முத்திரை தாளில் ரோட்டரி பப்ளிக் அவர்கள் வழியாக மொழி படிவம் எழுதி தர வேண்டும்.
11. மாத வாடகை ரூ.700X12 =ரூ.8400/– (ம) ஆறு மாத முன் பணம் ரூ.4200/– ஐ நகராட்சி கருவூலகத்தில் செலுத் வேண்டும்.

அ.கு–

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 816 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 5**

தலைவர், G 1059 செங்கல்பட்டு பால் நுகர்வோர், கூட்டுறவு சங்கம் லிட் எண்.332/149 அண்ணா சாலை அவர்களின் 13.06.2019 ஆம் தேதிய கடிதத்தில் செங்கல்பட்டு நகர பகுதியில் 6 இடங்களில் ஆவின் பாலகம் வைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

நகரமைப்பு ஆய்வர் மேற்படி 6 இடங்களை நேராய்வு செய்து அறிக்கை சமர்பிக்கப்பட்டதில் 3 இடங்களில் பொது மக்களுக்கும் போக்கு வரத்திற்கும் இடையூறு ஏற்படும் நிலையில் இருப்பதால் இதனை தவிர்த்து கீழ்கண்டுள்ள 3 இடங்களில் மட்டுமே ஆவின் பாலகம் கூட்டுறவு சங்கம் பெயரிலேயே வைக்க அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

**<u>தேர்வு செய்யப்பட்ட 3 இடங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையம் | பேருந்து நிலையத்தின் தென் கிழக்கு பகுதியில் உள்ள இடம் (“10X8”) |
| 2. | பழைய பேருந்து நிலையம் | காமராஜர் சிலையின் வடக்கு பக்கம் வாடகை கார் நிறுத்துமிடம் இடையே உள்ள இடம் (“10X8”) |
| 3. | புறவழிச்சாலை | புறவழி சாலை பேருந்து நேரக் காப்பாளர் அறைக்கு (ம) பயணியர் இருக்கைக்கு பக்கத்தில் உள்ள இடம் (“10X8”) |

எனவே மேற்கண்ட 3 இடங்களில் மட்டும் கீழ் கண்டுள்ள நிபந்தனைகளின் பேரில் தற்காலிக அனுமதியுடன் பங்க் வைக்க அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. இந்த உத்திரவு முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக உத்திரவினைக் கொண்டு எதிர் காலத்தில் எவ்வித அனுமதியும் சட்டப்படி கோரக்கூடாது.
3. இந்த 3 பங்க்கும் ("10X8") என்ற அளவில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். பங்க் முன் புறம் (அ) பின் புறம் (அ) மேல் புறத்தில் எவ்வித கட்டுமானம் ஏற்படுத்த கூடாது.
4. இந்த 3 பங்கிற்கு தற்காலிக மாதாந்திர கட்டணமாக தலா ரூபாய் 904/– செலுத்த வேண்டும்.
5. இந்த பங்கை பொது மக்களுக்கும் போக்கு வரத்திற்கும் எவ்விதமான இடையூறும் இல்லாமல் அமைக்க வேண்டும்.
6. இந்த இடத்தினை நகராட்சி மூலம் அல்லது வேறு அரசுத் துறை மூலம் தேவைப்படும் போது எந்த நேரத்திலும் காலி செய்ய முழு அதிகாரம் உண்டு.
7. இந்த இடத்தினை நகராட்சி கேட்டும் போது மறுக்கவோ (அ) சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளாமல் ஒப்படைக்க வேண்டும்.
8. இந்த உத்திரவு முற்றிலும் தற்காலிமானது.
9. இந்த உத்திரவு தொடர்ந்து தேவைப்பட்டால் வருடா வருடம் நகராட்சியின் அனுமதி பெற்று உரிமம் புதுபித்துக் கொள்ள வேண்டும்.
10. பங்கின் உரிமம் (ம) ரூ.20/– க்கான முத்திரை தாளில் ரோட்டரி பப்ளிக் அவர்கள் வழியாக உறுதி மொழி படிவம் எழுதி தர வேண்டும்.
11. ஒவ்வொரு பங்கிற்கும் மாத வாடகை ரூ.904X12 = ரூ.10848/– ம்
12. ஆறு மாத முன் பணம் ரூ.5424/– ஐ நகராட்சி கருவூலகத்தில் செலுத்த வேண்டும்.

அ.கு–

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 817 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.6**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழவேலிதலைமை நீரேற்றும் நிலையத்தின் புதிய TWAD Board Scheme ல் உள்ள 250 MM dia Sluice value 100 புதியதாக அமைக்கவும் இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.0.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இப்பணிக்கான செலவினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 818 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.7**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகளை அள்ள பயன்படும் வாகன எண்.TN19J 2464 ல் உள்ள பழுதினை நீக்கம் செய்ய 12.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | சக்தி பாடி ஒர்க்ஸ் பூந்தமல்லி | 1.49/– | 1,49,152/– |
| 2. | செந்தில் முருகன் ஒர்க்ஸ் பூந்தமல்லி | 1.59/– | 1,51,689/– |

மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்டுள்ள சக்தி பாடி ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று மன்ற அனுமதியுடன் பணி உத்திரவு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3179/2017/எச்1)

**அ.கு–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 819 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு 1– அனுமதி அளிக்கப்பட்டது

2– பின்னேற்பு அளிக்கப்பட்டது.

**பொருள் 8**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி குப்பைகளை அள்ளும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் அவ்வப்போது எதிர்பாராத விதமாக பழுதடைந்து விடுகிறது. மேலும் இனி வரும் காலம் மழை காலமாக இருப்பதால் நகரில் ஏற்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்ற வேண்டிய கடமையாகிறது. எனவே இவ்வாகனங்களை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்ய ஏற்படும் சில்லறை செலவினத்திற்கு ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1124/எச்1/2019)

**தீர்மான எண். 820 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 9**

இந்நகராட்சியில் பணி ஒப்பந்ததாராக உள்ள திரு.A.மோகன் என்பவர் இந்நகராட்யின் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டார். அதற்கான பணி அவருக்கு கிடைக்கப்பெற்று மேற்படி பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு பணியும் முடிவு பெற்றது. எனவே மேற்படி பணியில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணி தரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

| வ.எண் | வருடம் | பணி | தொகை |
|---|---|---|---|
| 1. | 2016–17 | கட்டிட கழிப்பறை கட்டும் பணி | 19,463 |
| 2. | 2015–16 | கட்டிட கழிப்பறை கட்டும் பணி | 11,375 |
| 3. | 2015–16 | கட்டிட கழிப்பறை கட்டும் பணி | 8,525 |
| 4. | 2015–16 | கட்டிட கழிப்பறை கட்டும் பணி | 22,011 |
| | | மொத்தம் | 61,374 |

மேலும் மேற்படி பணி முடிக்கப்பட்டு விட்டதாக பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் குறிப்பின்படி தொகை திரும்ப வழங்கவும், மேற்படி பணியில் 2015–16 (ம) 2016–17 ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளதால் மேற்படி மனுதாரர் செலுத்தியுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 821 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 10**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, வடமலை பள்ளி அருகில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் கழிவுநீர் தொட்டி பழுதடைந்துள்ளதை தொடர்ந்து அங்கு புதியதாக கழிவுநீர் தொட்டி அமைக்கவும், பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.40 இலட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 822 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 11**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் பாராளுமன்ற தேர்தலுக்கான அனைத்து அடிப்படை வசதிகள் (குடிநீர் வசதி, மின் வசதி, கழிப்பிட வசதி, 3 AMPS Pin, ரேம்ப், சாமியானா அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கல்வி நிதியில் இருந்து பணி மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 823 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 12**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட தூக்குமரகுட்டை உரகிடங்கு பகுதியில் SBM & IUDM 30 KLD கொள்ளவு கொண்ட Faceal Slude Treatrment Plant அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No.26888/UGSS-2/2018-40 தேதி 09.20.2019 படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அதற்கான தொழில் நுட்ப அனுமதி 06.03.2019 அன்று பெறப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளி 09.04.2019 அன்று கோரப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதி அமுலில் அன்று இருந்ததால் ஒப்பந்தப்புள்ளிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்ற பிறகு ஒப்பந்தப்புள்ளி விதியின்படி 29.05.2019 அன்று திறக்கப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி தூக்குமரக்குட்டை உரகிடங்கு பகுதியில் 30 KLD கொள்ளளவு | ரூ.382.00 இலட்சம் | 1. திரு.ஆர்.ரமேஷ் |

| | | | |
|---|---|---|---|
| | கொண்ட Faceal Sludge Treatment Plant அமைக்கும் பணி | | 2. திரு.செந்துார் முருகா கண்ரக்ஸன்ஸ் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு கூடுதல் ஆவணங்கள் பெறப்பட்டு தொழில் நுட்ப தகுதி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழி நுட்ப தகுதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு அதற்கான Price bid 12.06.2019 அன்று திறக்கப்பட்டதின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி துாக்குமரக்குட்டை உரகிடங்கு பகுதியில் 30 KLD கொள்ளளவு கொண்ட Faceal Sludge Treatment Plant அமைக்கும் பணி | ரூ.382.00 இலட்சம் | 1. திரு.ஆர்.ரமேஷ் 0.40% அதிகம் |
| | | | 2. திரு.செந்துார் முருகா கண்ரக்ஸன்ஸ் 3.45% அதிகம் |

மதிப்பீட்டை விட அதிகமாக வழங்கியுள்ளதால் விலை குறைத்து வழங்க ஒப்பந்ததாரருக்கு Negotiation Letter வழங்கப்பட்டது. விலை குறைக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளியின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி துாக்குமரக்குட்டை உரகிடங்கு பகுதியில் 30 KLD கொள்ளளவு கொண்ட Faceal Sludge Treatment Plant அமைக்கும் பணி | ரூ.382.00 இலட்சம் | 1. திரு.ஆர்.ரமேஷ் 0.05% குறைவு |
| | | | 2. திரு.செந்துார் முருகா கண்ரக்ஸன்ஸ் 3.45% அதிகம் |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.ஆர்.ரமேஷ், ஒப்பந்ததாரர் அவர்களின்ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. திட்ட பணியில் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 824 நாள் 28.06.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 13**

அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளிடம் இருந்து பேருந்து கட்டணம் வசூலிக்கும் வசூல் ரசீது புத்தகம் அச்சிட்டு வழங்கவும், அதற்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. பிரபாகரன் பிரிண்டர்ஸ் + பைண்டிங் 1000 புத்தகம் அச்சிட்டுத் தர ரூ.21000/–
   No 2/3 முருகப்பா தெரு,
   திருவல்லிக்கேணி சென்னை–5

2. M/S பிரித்தி பிரிண்டர்ஸ் பைண்டிங் பஜார் தெரு, 1000 புத்தகம் அச்சிட்டுத் தர ரூ.23000/–
   திருப்போரூர் வட்டம்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

மேற்படி வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்த M/S.பிராபாகரன் பிரிண்டர்ஸ் செ.5 அவர்கள் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பிரிவு 15–ன்

கீழ் பேருந்து நிலைய நுழைவு கட்டண ரசீது புத்தகங்கள் அச்சிட்டு பெறப்பட்டதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.21000/– க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 825 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 14**

செங்கல்பட்டு நகராட்சியில் **1** மின்கம்பியாளர் (wire man) மற்றும் **1** மின்கம்பி உதவியாளர் (Wire man helper) ஆகியோர் மட்டும் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள். இந்நகராட்சியின் **1** முதல் **33** வரையுள்ள வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாததால் கடந்த **01.09.2018** முதல் **31.08.2019** வரை 7 முதல் **33** வரையுள்ள வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை M/S AMR Electrical Engineering Contractor என்ற தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்து, தற்பொழுது **31.08.2019** வரை மேற்படி பணி உத்தரவு காலாவதியாவதால், தற்பொழுது **01.09.2019** முதல் **31.08.2020** வரை மேலும், ஓர் ஆண்டிற்க்கு M/S AMR Electrical Engineering Contractor என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு நீட்டிப்பு செய்யவும் மற்றும் **2018–2019** ஆண்டின் மதிப்பீடு தொகையுடன் கூடுதலாக **5%** (சதவீதம்) உயர்வு செய்து அதற்கான தோராய செலவினம் ரூ.**53.33** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மன்றத்தின் அனுமதியை எதிர்கொண்டு பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 826 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 15**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வாக்குசாவடி மையங்களில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற பொது தேர்தல் **2019** அனைத்து வாக்குசாவடிகளிலும் அனைத்து வசதிகளும் தயார் செய்யவும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களின் கடித ந.க.எண்.**400/2019**/அ**1**, **11.04.2019** ன் படி மாதிரி வாக்கு சாவடிகள் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து அண்ணா நகராட்சி ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஒரு மாதிரி வாக்கு சாவடியும், அனுமந்தபுத்தேரி டவுன் நகராட்சி ஆரம்பப் பள்ளியில் மாதிரி வாக்கு சாவடிகளிலும், சாமியானா, மின் விசிறி, மின்விளக்கு வசதிகள், சிவப்பு கம்பளம் போன்ற பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.**1.50** இலட்சம் ஆகும். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 827 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 16**

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–2020 ம் ஆண்டிற்கு அலுவலக அன்றாடப் பணிகளுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் தேவையான உபகரணங்களை அரசு அங்கிகாரப் பெற்ற நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்க நிறுவனங்களிலிருந்து ஒப்பந்ப்புள்ளி மூலம் பெற்று வாங்கிக்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.5.00 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி அளிக்கலாம் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 828 நாள் 28.06.2019**

பின்னேற்பு வழங்கப்பட்டது.

**பொருள் 17**

மாவட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.3719/2016/சஉதி/பஒ1 நாள்.30.05.2016–ம் தேதிய கடிதத்தில் செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 4 சத்துணவு பள்ளிகளிலும் அவசர கால உதவிக்காக நெகிழ்வு அட்டை (Flex Board) அமைக்கவும், இதற்கு ஒரு பள்ளிக்கு ரூ.2000/– வீதம் பணி மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய “Dolphin Digital Print” நிறுவனம் ரூ.1990/– க்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1602/எம்1/2017)

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பள்ளி சம்மந்தமான பணி என்பதால் நிர்வாக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் முன் அனுமதி பெற்று பணி செய்தமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 829 நாள் 28.06.2019**

அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் 18**

இந்நகராட்சியில் இயங்கி வரும் அனைத்து கணிப்பொறிகளுக்கும் அதன் சம்மந்தமான பிரிண்டர் மற்றும் Net work Switch, அனைத்திற்கும் 2019–2020 ம் ஆண்டு பராமரிப்பு செய்ய தோராய செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 830 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 19**

இந்நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வசூல் பணிகள் பதிவுகள் அனைத்தும் கணிப்பொறிகள் மூலமாகவே செய்யப்பட்டு வருகின்றது. கணிப்பொறிகளை அவசர அவசியம் (ம) தேர்தல் பணிகள் கருதியும் இந்நகராட்சிக்கு கணிப்பொறிகள், Laptop கணிப்பொறிகள், மற்றும் HP Printer, Key board & mouse, வாங்க தோராய மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்படி பொருள்களை நகராட்சி பொது நிதியிலிருந்து DGS & D Rate ல் பெற்றிட (அ) ஒப்பந்தபுள்ளி மூலம் பெற்றிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 831 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 20**

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தற்போது நகரில் உள்ள குப்பைகளை உடனுக்குடன் எடுத்து சென்று குப்பை கிடங்கில் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகரில் அதிகமாக தேக்கம் ஏற்படும் குப்பைகளை இந்நகராட்சியின் (JCB) மூலம் அப்புறப்படுத்துதல் மற்றும் ஆக்கிரமிப்பு பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளால் JCB இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்பட்டு வாகன பராமரிப்பு செலவு அதிகமாக ஏற்படுகிறது. இதனால் தணிக்கையில் ஆட்சேபனைகள் ஏற்பட வாய்ப்புண்டாகும் என்பதால் இதனை தவிர்த்து Annual Maintenance Contract மூலம் வண்டியினை பராமரிக்கவும்

இதற்காகும் உதிரிபாகங்கள் செலவினம் தோராயமாக ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 832 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 21**

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.48800/2006/எல், நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சி கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 01.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (நிலை எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை, நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதியதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழ்க்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும், அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service) கீழ் முதல்நிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சியில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class IV கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

**அ.கு—**

மன்றம் அனுமதி வழங்கலாம் ( ந.க.எண்.1615/2017/சி1)

**தீர்மான எண். 833 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 22**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 30 பிள்ளையார் கோயில் தெரு, செங்கை ராயல் சிட்டிக்கு செல்லும் வழியில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொது மக்களுக்கு உபயோகபடுத்த இயலாமல் ஆபத்தாக உள்ளது. எனவே பழைய RR சிறுபாலத்தை அப்புறபடுத்தி புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்திற்கு மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 834 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 23**

செங்கல்பட்டு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தற்பொழுது வரை 27 எண்ணிக்கையிலான Battery Operated Vehicle பெறப்பட்டுள்ளன. அந்த வண்டிகளை Charge செய்வதற்கும் மழை காலங்களில் நனையாமல் இருப்பதற்காக அதற்கு shed அமைக்க இடம் நேராய்வு செய்யப்பட்டது இதற்கான மதிப்பீடு ரூ.**9.90** இலட்சம் ஆகும். செலவினத்திற்கு மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 835 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் 24**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்ன.**5**, சூலை அதிமூலம் தெரு மற்றும் சின்னரத்தின தெரு சந்துக்களில் சிமெண்ட்சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.**2.70** இலட்சம் ஆகும். மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 836 நாள் 28.06.2019**

அனுமதி அளிக்கப்பட்டது

**தனி அலுவலர்/ ஆணையர்**

**செங்கல்பட்டு நகராட்சி**